உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரநாதர்பதிகம்.

துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

பரம்பரையிலொருவராகிய

கருணை ஐயரியற்றிய...

இஃது

காணியம்பாக்கம்

வேங்கடேசமுதலியார்குமாரராகிய

பொன்னம்பலமுதலியாரவர்களால்

சென்னை:

ஆதிகலாநிதி அச்சுக்கூடத்தில்

பத்தாமுறை

...திப்பிக்கப்பட்டது.

...ாதி௵ மார்கழி௴

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரநாதர்பதிகம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

சீர்மருவு தில்லைச் சிதம்பரநா தன்மீது.........................*
பேர்மருவு நற்பதிகம் பேசுதற்கே—ஏர்மருவு.....................*
கற்பகவேல் விட்டமலர்க் கையன்முன்னோன் யானைமுகக்
கற்பகவி நாயகன்றாள் காப்பு......................................*

ஆசிரியவிருத்தம்.

விரித்தசெஞ்சடையாட வதனசந்திரனாட விரிகமலநயனமாட - வெண்முறுவனிலவாட நண்ணுதமருகமாட வீசுமொருசெங்கையாடத், தரித்தபுலியதளாட அபயகரமாடஇரு தங்குதோசேலாடத் - தாங்குநூலாடமே லோங்குநீராடவொளிர் தண்பவளமேனியாட, உரித்தகரியுரியாட உரககங்கணமாட உபயபரிபுரமுமாட - ஒருபதமெடுத்தாட ஒருபதமிதித்தாட உள்ளேமகிழ்ந்துசற்றே, சிரித்துமலைமங்கைகொண் டாடநின்றாடுமுன் திருநடனமென்றுகாண்பேன் - செகம்பணிதிகம்பர சிதம்பரநடேசனே சிற்சொரூபாநந்தனே.... (க)

தொண்டரொருநால்வர்வாய்த் தேனெழுகுத ண்டமிழ்த் தொடையலணியுஞ்செய்யதாள் - தொன் மறைகளோயாது சத்தித்துவாழ்த்துந் துணைத்தா ளளக்கரும்பூ, மண்டலத்தின்பமற் றவர்நெஞ்சகத்தி னில் வயங்குதாளேனமறியா - வனசமலரொத்ததா ள் முயலகன்றலைமீது வைத்ததாளனுதினமும்வந், த ண்டர்முனிவரர்கிறைந் தஞ்சலித்துப்போற்று மணி சிலம்பொலிரீடுதா - ளடியனேன்கண்டுதரி சிக்கவெ ளிதன்றுநின் னருள்சிறிதுகூறுமெனிலோ, தெண் டிரைக்கொப்பான ஜனனவெவ்வினையின்று தீர்ந்து கதியடைவதரிதோ - செகம்பணிதிகம்பர சிதம்பரந டேசனே சிற்சொரூபாநந்தனே.... ... ... (உ)

தங்குபூதாதிநா தாந்தமென்றெண்ணவரு தனுக ரணபுவனபோகஞ் - சதுர்விதமடங்கலுங் கானனீரா கவுஞ் சார்வாகர்முதலாகவே, மங்குபரசமயகுரு ட ர்க்கிருட்டாகவும் வளர்சைவசம்பிரதாயம் - வந்தசி த்தாந்திக ளெனுந்தெரியும்விழியினோர் மலவிருளன ந்தகோடி, பங்கமுற்றேயோடி விடியவுமவரிதய பங் கயம்விகசிக்கவும் - பனையாதிபஞ்சசத் திகளெனுங்கி ரணம் பரப்பியேநடனமிடுமோர், செங்கதிரவன்னி யுனைப்பரவியென்விழி தெரிந்துதரிசிப்பதெந்நாள் - செகம்பணிதிகம்பர சிதம்பரநடேசனே சிற்சொரூ பாநந்தனே.... ... ... (௩)

அம்புவியிலண்டக் தொடுத்தகிலபுவனங்க ளாவ தேயுன்னுருவமும் - அங்கங்குறுஞ்சரா சரமென்ப

தேசஉருவி னங்கமும்பொங்கபின்ன, சம்பந்தசிற்சத்தி யென்கின்றவிச்சையொடு சாரூபஞானகிரியை - தங்குமுட்கரணமு மங்காமலெங்குமே தாவிடும்பசுவர்க்கமும், நம்பும்புலங்களும் அவைக்கறிவளித்திடவு நண்ணும்ஐந்தொழிலேதிரு - நடமுமாய்நின்று நாடகஞ்செய்திடில் நாடுமிடமவேறுகாணேன், செம்பொனம்பலமென்ப தென்னுளமதாகவே செய்துகொண்டேநடிப்பாய் - செகம்பணிதிகம்பர சிதம்பரநடேசனே சிற்சொரூபாநந்தனே.... ... ... (ச)

ஒருகணக்கில்லாத ஆத்மவர்க்கங்களுக் கொருகைத்தலத்தமருகம் - உடல்கரணபுவனபோ கங்களையுதிப்பிக்கும் ஓரபயகரதலம்பின், பெருகத்திதிக்குமொரு செங்கைத்தலத்தங்கி பேர்பெறச்சங்கரிக்கும்-பேதமறஊன்றுமொரு பாதபங்கயசுகம் பேசத்திரோபவிக்கும், அருளென்றுதூக்கியா டியபாதமும்மலங் களையுமறவேர்பிடுங்கி-அகண்டபரிபூரண சிதானந்தவாரியை யளிக்குமுன்னருளற்புதத், திருநடனமகிமைதனை யாருள்ளபடிகண்டு தெரிசித்திருக்கவல்லார் - செகம்பணிதிகம்பர சிதம்பரநடேசனே சிற்சொரூபாநந்தனே.... ... ... (ரு)

பவங்களாகியபசியி னுல்வாடியோடிப் பறக்குமென்சிந்தைவண்டு - பரநாதபரவிந்து சிரமாகவருமென்று பகாபரவிந்துநாதம், உவந்திடுசதாசிவ மகேசுரனுருத்திர னுலவும்அலைகடலிநடுவே - உரகசயனத்தினரி நறைமடையுடைத்தொழுகு மொருகமல

மேலயனெனும், நலந்தருவிதங்கலைகள் வன்னபதம ந்த்ரபுவ னங்கள்பூதாதிவிந்து - நாதமுடிவானதொ ரு போதபரமானந்த நடுவெளியிலேநடித்துச், சிவ ந்தஉண்சரணகம லத்தேனையுண்டுண்டு தேக்கிட்டிரு ப்பதென்னாள் - செகம்பணிதிகம்பர சிதம்பரநடேச னே சிற்சொரூபாநந்தனே.... ... ... (௬)

ஆயிரங்கிரணம்விடு பானுபதிநாறுபத் ததிகாரம் வந்திறந்தால் - அம்போருகத்திலுறை பிரமனுக்கோ ர்பக லங்கவன்கோடியழியில், மாயனுக்கோர் பகனூ றுநூறுயிர மாவிறந்தாலெமக்கோர் - மாத்திரைப் போதேனு மில்லையெனவேயுள மகிழ்ந்துசற்றேந கைத்துத், தூயநகையெரியாற் ப்ரபஞ்சமெல்லாத் தையுஞ் சுட்டுவெண்சாம்பலாக்கிச் - சுட்டசாம்பலை யெடுத் துத்தரித்துச்சர்வ சூனியமயானத்திலோர், சேயிழையுடன்றனித் தானந்தநிர்த்தமிடு தெய்வமி ங்கென்னையாள்வாய் - செகம்பணிதிகம்பர சிதம்பர நடேசனே சிற்சொரூபாநந்தனே.... ... ... (௭)

உருவல்லஅருவல்ல உருவருவமல்லவிங் கொரு விதத்தறிவதல்ல-ஒன்றலவிரண்டுமல உள்ளல்லவெ ளியல்ல ஒன்றினுந்தோய்வதல்ல, இருளல்லவெ ளியல்ல இலதல்லஉளதல்ல இன்பதுன்பங்களல்ல - இங்குகிர்ச்சித்தல்ல வெங்குநிரசத்தல்ல வீறுமுதலு டையதல்ல, மருளுடன்பகலின்றி இரவின்றிநின்றவ ர்கள் மாசற்றமனவெளியெனும் - மாகனகசபைநடுவி

லேயென்றுமொழியா மனேலயானந்தமயமாய்த், தெருளென்றுநின்றநின் குஞ்சிதபதத்தையென் சிந்தைமறவாதுகண்டாய்-செகம்பணிதிகம்பர சிதம்பரநடேசனே சிற்சொரூபாநந்தனே.... ... ..., (அ)

சத்திபாதாளத்தி னப்புறத்தேயேக சரணபங்கயமுயலகன் - சந்தொடியவேயுதைத் தண்டகோடிகளின்மேற் சடாடவியெலாம்விரித்துக், கைத்தலங்களுநிறுவி வைத்திடுபுயங்களுங் கருணைவளருங்குஞ்சிதக்-கஞ்சமலரடியொன்று விஞ்செண்டிசாமுகங் களையுங்கடந்துநிற்க, மொய்த்தநூறுயிரங் கோடிசூரியர் சந்த்ரர் முதலொளியெலாமழுங்கி - மூழ்கவொருமேனியொளி காட்டிநின்றுமுன் முடிவினடனங்கொஞ்சமோ, சித்தமாகியசபையி னுள்ளேயடங்கிடுஞ் செய்விகமென்னசொல்வேன் - செகம்பணிதிகம்பர சிதம்பரநடேசனே சிற்சொரூபாநந்தனே.... (கூ)

கைத்தலமிரண்டினுஞ் சங்குசக்ராயுதங் காட்டியோரட்சிப்பதும் - கண்டகண்டங்களை யெலாம்படைத்தருள்பெரிய கமலாசனத்துறைவதும், மத்தகஜகும்பமுலை வனிதையர்கணடமாட வண்டுகிதம்பாடவே - மண்டுகற்பகநிழலி லண்டர்தொழ அரியணையில் வாழுமிந்திரபதமுமே, எத்தனையடைந்தாலு மத்தனையும்வெகுதுயர மெனவெறுத்தேயெனக்குன் - இணையிலாநந்தங்க ளைக்கண்டிருக்கமே லிட்டபித்தின்னமின்னம், செத்துப்பிறக்கினு மொருக்காலுமொ

ழியாது திருவுளமிரங்கிஅருள்வாய் - செகம்பணிதிக
ம்பர சிதம்பரநடேசனே சிற்சொரூபாநந்தனே. (கㅇ)

உன்னுடையநடனத்தை உள்ளபடியொளியாம
லொருவிமிடமாகிலுங்கண் - டுத்தமர்கள்பெற்றிடுவர்
முத்தியினையென்றென் றுரைக்குமறையுண்மையா
னால், முன்வந்தசனனத்தி லேயெனக்குக்கண்டு மு
டியக்கிடைத்ததனால் - முற்பந்தமோடிவிடு மிப்பந்
தம்வாராது முடியுமுன்னிப்பவத்தே, புன்மையறி
வோடாகி லுங்காணவருகின்ற பொலிவினால்மேற்பி
றப்பு - போனதேபோவதற் கேதுவீதாதலால் புண்
ணியமிருந்தவிந்தச், சென்மமன்றேசென்ம மெண்
பத்துநான்குநூ றாயிரஞ்சென்மத்திலுஞ் - செகம்ப
ணிதிகம்பர சிதம்பரநடேசனே சிற்சொரூபாநந்த
னே.... ... ... (கக)

சிதம்பரநாதர்பதிகமுற்றிற்று.

சிதம்பரநாதர் பஞ்சரத்தினத்துறை.

காப்பு.

வெண்செந்துறை.

சிதம்பரப் பஞ்சரத் தினத்துறை யோத
மதம்பொழி களிற்று மாண்பதந் துணையே.

பஞ்சரத்தினத்துறை.

கட்டளைக்கவித்துறை.

திருமாற்கரிய னயற்கரியன்செஞ்ச டாடவியன் ....*
ஒருமான்றிகழ்கர னைம்முகன்சங்கர ஞெண்மலையன் ....*
இருமானிடைமுடி யோனெனப்போற்றி யிறைஞ்சுமென்னைக்
கருமால்வினைகெடக் காப்பாய்சிதம்பர காரணனே ....(க)

காரணன்வேதக் கடன்முகட்டோதயன் கன்னல்வில்லோன்*
மாரணன்முக்கண னெண்டோளனன்பர் மனேற்பவச்சம்....*
பூரணனென்றுனைப் போற்றிப்பணியுமென் புன்கலியைச் ....*
சூரணஞ்செய்தருள் செய்வாய்சிதம்பர சுந்தரனே ....(உ)

சுந்தரன்சந்திர வேணியன்சுந்தரர் தூதுவன்சம் ....*
பந்தருமப்பரும் வாதரும்பாடிய பாண்டரங்கன் ....*
மந்திரமூலனென் றேத்திப்பணியுமென் வல்வினையை ....*
அந்தரக்காற்றிற் பஞ்சாக்குஞ்சிதம்பர வற்புதனே..........(ங)

அற்புதனேஜன காதியர்க்கோர்மொழி யானதைச்சொல் ...*
விற்பனனேசைவ வேதியனேவெண் விபூதியனே...........*
தற்பரனேயெனச் சந்ததம்போற்றும் தமியனுக்குக் ....*
கற்பிதமின்றிவந் தாளாய்சிதம்பர காவலனே................(ச)

காவலன்வெள்விடை யோன்மதுரைச்சங்கத் தைக்கடிந்த...*
நா[illegible]ன்சவுந்தரி நாயகன்செம்.. ....*
[illegible]பணியென் பவந்தொலைப்பாய் .. *
மா[illegible]சிதம்[illegible]மாணிக்கமே ....(ரு)

பஞ்சரத்தினத்துறைமுற்றிற்று.